முற்பகல் 11–00

3. அறிக்கைகள் அளித்தல்

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திருமதி வளர்மதி ஜெபராஜ்.*

திருமதி வளர்மதி ஜெபராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003–2004 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் 46–வது முதல் 50–வது வரையிலான 5 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு விலங்குகளையும், பறவைகளையும் பலியிடுவதைத் தடை செய்தலை (நீக்குவதற்கான) சட்டமுன்வடிவு, 2004

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு விலங்குகளையும், பறவைகளையும் பலியிடுவதைத் தடை செய்தலை (நீக்குவதற்கான) சட்டமுன்வடிவு. மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.*

***மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு விலங்குகளையும், பறவைகளையும் பலியிடுவதைத் தடை செய்தலை (நீக்குவதற்கான) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS